# விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: அமைச்சர்கள் பங்கேற்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.அதன்படி நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி அலுவலகம் எதிரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை சிற்றுண்டி உணவுத் திட்டத்தை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதன்பின் மாணவிகளுடன் அமர்ந்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு காலை சிற்றுண்டி அருந்தினார். நிகழ்வில் இராதாபுரம் ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி, மாவட்ட திட்ட இயக்குனர் சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மானூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நேற்று (25.08.2023) தொடங்கி வைத்தார்.



இராமநாதபுரத்தில் விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் வாரியத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் துவக்கி வைத்தார். இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் ராம கருமாணிக்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் அரசு பள்ளிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தார்கள், அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம் கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேற்கு ஊராட்சி ஒன்றியம் சின்னப்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கி உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மாவட்ட முகமை திட்ட அலுவலர் சரவணன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முழுவதும், 25.08.2023, வெள்ளிக்கிழமை, காலை 8 மணியளவில், தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி, மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநிலம் முழுவதும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை, திருக்குவளையில் துவக்கி வைத்தார். இதனையடுத்து கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, சி.என்பாளையம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். பின்னர் மாணவர்களுக்கு புத்தக பைகளை வழங்கினார். பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாணவமாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி, பெட்டட்டி அரசு துவக்கப்பள்ளி யில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், போக்குவரத்து துறை சிறப்பு செயலாளர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்ஷினி உள்ளிட்ட மாவட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்திடும் வகையில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர் களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் துவக்கி வைக்க உள்ள நிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி போலீஸ் காலனி நவல்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விழாவில் கலந்து கொண்டு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சேர்மன் சத்யா கோவிந்தராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், பொதுக்குழு உறுப்பினர் நவல்பட்டு சண்முகம், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க..ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்கள், அதனை தொடர்ந்து மதுரை மாநகர் முத்துப்பட்டியில் அமைந்துள்ள அரசுப்பள்ளியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்கி அவர்களுடன் அமர்ந்து உணவருந்திய போது எடுத்தபடம். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.